பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

UTHAYAN

விலை ரூபா 3·50

சுடர்: 5 பிரேமதூத ஆடு ஐப்பசி மீ 25 உ ஞாயிற்றுக்கிழமை (11 - 11 - 1990) ஹிஜ்ரி 1410 ற, ஆகிர் 22 கதிர்: 249

## குடும்பத்துடன் வெளிநாடு செல்வோர்

# வீடு, நிலங்களை ஒப்படைக்க

# விடுதலை புலிகள் கோரிக்கை

## புனர்வாழ்வு, உற்பத்திக்கு திட்டம்

யாழ்ப்பாணம், நவ. 11

போர்க்கால நெருக்கடியில், தமது சமூகத்துக்கு ஆற்றவேண்டிய கடமைகளை மறந்து குடும்பத்துடன் வெளிநாடு செல்வோர், போர்க்கால தேவைகளைக் கருத்திற் கொண்டு தமது வீடுகளையும், விவசாய நிலங்களையும் தற்காலிகமாக தங்களிடம் ஒப்படைக்குமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கோரியிருக்கிறது.

யுத்த நடவடிக்கைகளினால் பாதிப்புற்ற மக்களுக்கு புனர்வாழ்வு அளிக்கவும், போர்க்காலத்தில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்டிகளைத் தவிர்க்கும் விதத்தில் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இந்தச் சொத்துக்களை ஒப்படைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகம் நேற்று விடுத்த நீண்ட அறிக்கை ஒன்றிலேயே இந்தக் கோரிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்த அறிக்கையில் —

யுத்த நடவடிக்கையினால் ஏராளமான தமிழர்கள் வீடு வாசல்களை இழந்திருப்பதும்-

யுத்த முனைகள், எல்லோரப் பகுதிகள், திருகோணமலை உட்பட கிழக்கின் பல பிரதேசங்கள் ஆகியவற்றிலிருந்து தமிழர்கள் இடம் பெயர்ந்திருப்பதும்—

இத்தகைய மக்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டிய அவசியம் குறித்தும் —

யுத்தத்தைக் காரணம் காட்டி உணவுப்பொருள்கள்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரசேகர் நேற்று பிரதமராகப் பதவியேற்பு

புதுடில்லி, நவ. 11

இந்தியாவின் ஒன்பதாவது பிரதமராக திரு. சந்திரசேகர்



நேற்றுக் காலை பதவி ஏற்றார்.

அவருக்கு ஜனாதிபதி திரு இ. வெங்கட்ராமன் பதவிப் பிரமாணமும் இரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

துணைப் பிரதமராக திரு. தேவிலாலும் நேற்றுப் பதவி ஏற்றார்.

இருவரும் இந்தி மொழியில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில், பதவி விலகும் பிரதமர் வி. பி. சிங், அமைச்சர்கள், உப ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ்காந்தி ஆகியோர் கலந்துகொண்டனர். [ஒ எ]

## சந்திரசேகர் சிங் சந்திப்பு

புதுடில்லி, நவ. 11

புதிய பிரதமர் சந்திரசேகர் முன்னாள் பிரதமர் வி. பி. சிங்கை அவரது வீட்டுக்குச் சென்று சந்தித்துப் பேசினார்.

இது ஒரு மரியாதைச் சந்திப்பு என்று சொல்லப்பட்டது [ஒ எ]

## வங்கி வெற்றிடங்களுக்கு இப்போது நியமனம் இல்லை

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச வங்கிகளின் கிளைகளில் உள்ள வெற்றிடங்கள் தற்சமயம் பூர்த்தி செய்யப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொள்கைத் திட்டமிடல், அமுலாக்கல் அமைச்சின் பணிப்பாளர் டாக்டர் பி இராமானுஜம் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண நிலைமை வழமைக்குத் திரும்பிய பின்னரே வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்றும் அவர் சொன்னார்.

ஆனால் கிழக்கில் அம்பாறைப் பகுதியில் உள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்றார் அவர். (உ)

## மிதி வெடியில் மீனவர் காலை இழந்தார்

யாழ்ப்பாணம், நவ. 11

கடற்றொழிலுக்குச்சென்று கரையேறிய ஒருவர் மிதி வெடியில் அகப்பட்டு இடது காலை இழந்தார்.

மண்டைதீவுக் கடற்கரையில் நேற்று இச் சம்பவம் இடம்பெற்றது.

கொட்டடியைச் சேர்ந்த நடராசா ரதீஸ் [வயது 16] என்பவரே காலை இழந்தவராவார். [ஒ 15)

## கடற்படை படகு மீது வங்காலையில் தாக்குதல்

### மாலுமி, சிப்பாய் உயிரிழந்தனர்

கொழும்பு, நவ. 11

வங்காலையில் நேற்று கடற்படையினர் படகு ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் மாலுமி ஒருவரும், சிப்பாய் ஒருவரும் உயிரிழந்தனர்.

பாதுகாப்புப்படை வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன. (உ)

## இடம்பெயர்ந்தோர் சங்கம் ஆர்ப்பாட்டம் நடத்த முஸ்தீபு

யாழ்ப்பாணம், நவ. 11

கிழக்கு மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்த ஊழியர் சங்கம் அரச அதிபரிடம் மூன்று கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்த உள்ளது.

கிழக்கு மாகாணத்திலிருந்து இடம் பெயர்ந்த அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்கள் இது தொடர்பாக ஆராய்வதற்காக எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 00 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் கூட உள்ளனர்.

## படகு மீது படையினர் சூடு! புங்குடுதீவு வாசி மரணம்!!

யாழ்ப்பாணம், நவ. 11

நேற்றுமாலை நெடுந்தீவிலிருந்து ஐந்து பயணிகளுடன் புங்குடுதீவு நோக்கி வந்து கொண்டிருந்த படகு ஒன்றை நோக்கி கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனால் ஒருவர் பலியானார். மற்றும் மூன்று பேருக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

கடற் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து சி இரத்தினம் என்பவர் கடலில் பாய்ந்து நீந்திக் கரை சேர்ந்தார்.

நேற்றுக் காலை புங்குடுதீவில் கரை ஒதுங்கிய இந்தப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வாகனம் வாங்கச் சென்று கைதான பொறியியலாளர் தற்கொலை என பொலீஸார் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 11

கொழும்புக்கு வாகனம் வாங்கச்சென்ற சண்டிலிப்பாய், மாகியப்பிட்டியைச் சேர்ந்த வெற்றிவேலு சரவணபவான் என்பவர் கொழும்பு, கோட்டை இரகசிய பொலீஸ் திணைக்களத்தின் 4 ஆவது மாடியில் இருந்து ஜன்னல் வழியாகக் கீழ பாய்ந்து தற்கொலை செய்துகொண்டதாகப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜப்பான் சுமிற்றோமோ சிமெந்துக் கம்பெனியில் பொறியியலாளராகக் கடமையாற்றிய இவர், சமீபத்தில் தமது சொந்த ஊரான மாகியப்பிட்டி வந்திருந்தார்.

கடந்த மாதம் 18 ஆம் திகதி கொழும்பு சென்ற அவர், 22 ஆம் திகதி தமது மகனுடன் ஓட்டோ [illegible] கொழும்பிலுள்ள பிரபல

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டுநகரில் 'சென்றி' மீது கிரனேட் வீச்சு

மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள 'சென்றி' மீது கடந்த புதன் கிழமை காலை கிரனேட் வீசப்பட்டதில் இரண்டு கான்ஸ்டபிள்கள் காயமடைந்தனர்.

அருகில் இருந்த பெண் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மயக்கம் அடைந்தார்.

அதன்பின்னர் பொலீஸார் அப்பகுதியில் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு [illegible] பொது மக்கள் காயமடைந்தனர். [ஒ எ]

## கடத்தப்பட்ட 'தாய்' விமானம் கல்கத்தாவில் தரையிறக்கம்!

புதுடில்லி, நவ. 11

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் இருந்து ரங்கூன் நோக்கிப் பறந்து கொண்டிருந்த தாய்லாந்து பயணிகள் விமானம் ஒன்று நேற்று 3 பர்மியப் பிரசைகளினால் கடத்தப்பட்டது.

இருநூறு பயணிகளுடன் கடத்தப்பட்ட இந்த விமானம் பின்னர் கல்கத்தா விமான நிலையத்தில் தரை இறக்கப்பட்டது.

பயணிகளை விடுவிப்பதற்கு பர்மிய இராணுவ அரசுக்கு எதிரான கோரிக்கைகளைக் கடத்தல்காரர்கள் விதித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

பயணிகளில் 25 பேர் நேற்றிரவு விடுவிக்கப்பட்டனர் (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

6 – 11 – 90 செவ்வாய்க் கிழமை மாலை 6 30 மணிக்கு எஸ்தியாம்பிள்ளை யோசப், யோ. சகாயம்மா ஆகிய இரு அடையாள அட்டைகளும் மடத்தடிக்கும் செமினரிக்கும் இடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் பெரியகோவில் பங்குத் தந்தை ஜெபநேசரிடம் ஒப்படைக்கவும்.
(14728)

### கல்வி

G C E (O/L) ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 24 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் தொடர் வகுப்புக்கள் மூலம் குறைந்த காலத்தில் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். மற்றும் பாலர் வகுப்பில் இருந்து A/L வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படும். எனது வீட்டிலும் தனிப் பட்ட வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஆறுமுகத்தான் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கண்டிக்குளி.
[14731]

### அறிவித்தல்

யாழ்ப்பாணம் ஜுபிலி பசாரில் இயங்கி வந்த சிங்கர் கிளை மீண்டும் அதே இடத்தில் இயங்குகின்றது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.
(14723)

### இடமாற்றம்

இல. 455A கே. கே. எஸ். வீதி, கொக்குவிலடியில் இயங்கி வந்த நாயர்மார்க் கட்டு வைத்திய நிலையம் தற்பொழுது அதற்கு சமீபமாக மனோகரா சந்திக்கு அண்மையில் 179 நாவலர் வீதியில் அமைந்துள்ளது என்பதை அறியத்தருகின்றோம். டாக்டர் திருமதி ஸ்ரீ ஜெயதேவி பஞ்சலிங்கம்.
(14735)

### மல்லிகை வெள்ளி விழா மலர்

படிக்கலாம், பாதுகாக்கலாம் பரிசளிக்கலாம், பல்வேறு நாடுகளுக்கும் அனுப்பலாம். உள்ளடக்கச் செழுமை மிக்க மலர் உயர் வகுப்பு மாணவர்களுக்குப் பயனுள்ளது வேறு புத்தகங்களும் கிடைக்கும் மல்லிகை 234 B, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
[14725]

### கலைப்பீடம் பொதுக்கலைமாணி பரீட்சை-1989

மேற்படி பயிற்சிநெறிக்கான மாணவர்கள் புவியியலுக்கான தமது ஆய்வுக் கட்டுரையை 20-11-90 க்கு முன்பாக பரீட்சைக் கிளையில் சமர்ப்பிக்கவும்.

காலதாமதமாகச் சமர்ப்பித்தால் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

பதிவாளர்,
பரீட்சைக் கிளை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
(சி/5401)

## வெள்ளத்தால் இடப்பெயர்வு

நெடுந்தீவு நவ 11 நெடுந்தீவின் தென் பகுதி நெடுந்தீவில், பெய்த பெரு மழை காரணமாக அங்கு வெள்ளம் ஏற்பட்டுள்ளது. தகளில் வசித்து வந்த அநேக குடும்பங்கள் இடம்பெயர்ந்து கோவில்களில் தங்கியுள்ளன.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்



மலர்வு: 08 | 10 | 1967

உதிர்வு: 28 | 09 | 1990

திருமதி
தில்லைநாதன் கௌசலா
(மணிமாலா)

அலைகடல் சூழ்தீவாம் அனலைம்பதிக்கு வாணிப நோக்குடன் சென்று
காரிகைதனைக்கண்டு மையல் கொண்டு ஈராண்டு சென்றதம்மா!
கடிமணம் புரிந்து கைப்பிடித்து ஈராண்டு செல்லு முன்பே மணிமாலா என்னும்
காதல் அரும்பு ஓடி மறைந்து ஒன்றரைத் திங்கள் ஆனதையோ என் செய்குவேன்!

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இந்தியாவிலுள்ள புனித தலமான காசியில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனலைவாழ் மக்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**கணவன், ஐயா, அம்மா, மாமி, சகோதரர், சகோதரி, மைத்துனர்மார், மைத்துனிமார், பெறாமக்கள், மருமக்கள்.**

2ஆம் வட்டாரம்,
அனலைதீவு
(சி-5395)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



பொன்னம்பலம் பத்மநாதன்

மலர்வு: 07 – 04 – 1931
உதிர்வு: 27 – 09 – 1990

வருடம் ஒன்றுதான் பத்மா நீ
எம்முடன் பணி புரிந்தாய்
எண்ணிடும் போதோ அது எமக்கு
எண்ணற்ற ஆண்டுகளாய்த் தெரிகிறதே!

ஏன் அப்படி என்று வியக்கிறோம்
உன் கடமை உணர்ச்சியும்
கஷ்ட வேளையிலும் பணிசெய்யும் விருப்பமும்
மற்றவர்க்கு ஓர் உதாரணமே!

பொறுப்பேற்ற வேலையை மிகப் பக்குவமாய்
செய்து முடித்திடும் பண்பால்
பலருக்கு முன்னோடியானாய் நீ
பத்திரிகை விற்பனைத் துறையினிலே
ஒரு வித்தகனும் ஆனாய்!

வெம்மர் எமன் வந்து உன்னை
எம் படைவில் வைத்து பிரித்திடுவான் என்று
எதிர்பார்த்தோமா நாம்?
உன் நினைவு என்றும் எமது
உள்ளங்களில் நிலைத்திருக்கும்.

நிர்வாகத்தினரும்,
ஊழியர்களும்.

உதயன் வெளியீட்டகம்,
யாழ்ப்பாணம்.

## 91 ஆம் நாள் நினைவஞ்சலி





நாகலிங்கம் ஸ்ரீஸ்கந்தராஜா (சிறி) (கப்பாமணி) வெக்காவில்
காளிமுத்து சுரேந்திரன் (மகாலிங்கம்)

அன்னையின் மடியில்: 21 – 05 – 1959 | அன்னையின் மடியில்: 22 – 09 – 1985
அரக்கர் அழிப்பில்: 13 – 08 – 1990 | அரக்கர் அழிப்பில்: 13 – 08 – 1990

திதி: 11 — 11 — 1990

"கடலினில் கடற்புறா பயணங்கள் போனதே
ஸ்ரீலங்கா ராணுவம் குறி வைக்கலானதே"

எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் அன்பு உள்ளங்கள்
எங்கள் நெஞ்சை விட்டு அகலாது இருக்கும்
உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும்
இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**உன் அம்மா, சகோதரங்கள், அண்ணிமார், அத்தான்மார், மருமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.**

கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
[14737]

## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி சத்தியரூபா குணநாயகம்

மலர்வு: 14 – 05 – 1958
உதிர்வு: 24 – 10 – 1989

திதி: 11 — 11 — 1990

என் மகளே என்கண்ணே எம்மவளே
என் உயிரே என் திருவே எம் பிறப்பே
என்றுன்னை நம்மவர்கள் இரங்கியா
எமைவிட்டு இறைபாதம் சென்றதேனோ!
அன்னையவள் உன்நினைவால் உருகி நிற்க
அன்பீர்ந்த கணவனிங்கு திகைத்திருக்க
உடன் பிறந்தோர் இப்புவியில் தனித்திருக்க
உடைமையெனச் செகத் தென்று பிரிந்ததேனோ!
சந்திரனின் கறைபோகும்,
சங்கொலியும் நின்றுபோம்
செந்தமிழின் இனிமையும் குன்றிப்போம்
சத்தியாவே! சந்தம் நிறை நின் நினைவோ
சத்தியமாய்ச் சாகாது இம்மண்ணில் உள்ளவரை!

**அம்மா, கணவன், சகோதரங்கள், உற்றார், உறவினர்.**

46/2, கொழும்புத்துறை,
கண்டிக்குளி.
[14287]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### காலம் வந்துவிட்டது

வரவு செலவுத் திட்டக் காலம் நெருங்கிக்கொண்டு வருகிறது. எனினும் நிதி அமைச்சரின் சுறுப்புப் பெட்டியிலிருந்து விலை உயர்வு, வரி விதிப்பு, சம்பள உயர்வு போன்ற இரகசியங்கள் வெளிவருவதற்கு முன்னரே சம்பள அலவன்ஸ் குறித்து அறிவித்தல் வந்திருக்கிறது.

சர்வதேசச் சந்தையில் எண்ணெய் விலை உயர்ந்துவிட்டது. வழமையான வருடாந்த அதிகரிப்பை விட இம்முறை விலை உயர்வு கூடுதலானதாகும். வளைகுடா நெருக்கடியே அதற்கு விசேட காரணம்; அதனால் இங்கேயும் பெற்றோலியப் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. அதனைச் சமாளிப்பதற்காகவே அரச ஊழியருக்கு மேலதிக அலவன்ஸ் வழங்கப்படுகிறது.

மாதச் சம்பளம் பெறுவோருக்கு அலவன்ஸ் கொடுத்துவிட்டால், எண்ணெய் விலை உயர்வால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துவிடலாம் என்று அரசாங்கம் கருதுகிறதா? பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய தாக்கங்களை நிவர்த்தி செய்ய முடியும் என்று எண்ணுகிறதா?

பாரிஸ் மாநாடு வழங்கிய நூறு கோடி அமெரிக்க டொலர்களில் 20 சதவீதம் மட்டுமே உதவி நிதி மிகுதி 80 சதவீதமும் கடன். கடன் பணம் இன்னென்ன துறைகள் திட்டங்களுக்கென பெயர் குறித்தொதுக்கி கொடுக்கப்பட்டுள்ளது. எனவே அவற்றில் கைவைக்க முடியாது. உதவியாகக் கிடைத்த 20 சதவீதப் பணத்தைக்கொண்டு எரிபொருள் விலை உயர்வைச் சமாளிக்க அரசு முயற்சிக்கிறதாம்!

ஆனால் அது நாட்டின் பொருளாதாரத்தில் பலத்த பின் விளைவுகளை ஏற்படுத்தும் என்பது பொருளியல் நிபுணர்களின் கருத்து.

வளைகுடா நெருக்கடி தோன்றுவதற்கு முன்னரே வடக்கு - கிழக்கு யுத்தத்துக்குப் பணத்தைக் கண்டுபிடிக்க அரசு படாதபாடுபட்டது. திறைசேரி உண்டியல் மூலமும், யுத்த உறுதி நோட்டுகளை விற்றும் யுத்தத்துக்குக் கடன் திரட்டி வந்தது. வளைகுடா நெருக்கடி ஆரம்பித்ததும் பாதுகாப்புச் செலவை எப்படி ஈடுசெய்வது என்பது குறித்துத் தலையை உடைத்துச் சோர்ந்துபோயிருந்தது.

பாரிஸ் மாநாட்டில் 100 கோடி டொலர் உதவி கிடைத்துவிட்டது என்ற துணிவில், மீண்டும் துடிப்பேறி யுத்தத்தைத் தொடருகிறது. மகாவலி நிதிக்கெனப் பணம் பெற்று ஆயுதம் வாங்கியது போல, பாரிஸ் மாநாடு குறித்தொதுக்கிய கடனைப் பாதுகாப்புச் செலவுக்குப் பயன்படுத்த அரசு முனையலாம்.

எரிபொருள் விலை உயர்வைச் சமாளிக்க உதவி நிதியிலிருந்து பணம் பெறுவது பொருளாதார நோக்கில் பாதகமானால், போருக்குச் செலவிடுவதால் பாதிப்பு ஏற்படாதா?

பொருளாதாரப் பாதிப்பைத் தவிர்த்து நாட்டை தொடர்ந்து வாழவிடுவதா அல்லது யுத்தத்தைத் தொடர்ந்து பொருளாதாரத்தை வேரறுத்து அரசியலைத் தொடர்வதா என்பது குறித்து அரசாங்கம் முடிவு செய்ய வேண்டிய காலகட்டம் வந்துவிட்டது.

# வங்கிகளுக்கு தேவையான பணம் அனுப்ப கூட்டுப்படை முட்டுக்கட்டை

## திணைக்களத் தலைமையகங்கள் தயார்

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ்மாவட்டத்தில் உள்ள வங்கிகளுக்கு தேவையான முழுப்பணத்தையும் கொண்டு வருவதற்கு கூட்டுப் படைத் தலைமையகம் கட்டுப்பாடு விதித்துள்ளது.

இங்குள்ள வங்கிகளுக்கு தேவையான பணத்தை அனுப்ப கொழும்பில் உள்ள அந்த வங்கிகளின் தலைமையகங்கள் தயாராக இருக்கின்றன. ஆனால் கூட்டுப்படைத் தலைமையகத்தின் கட்டுப்பாடுகளால் போதுமான அளவு பணம் அனுப்புவது தடைப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

### திணைக்களங்களும் இதே நிலையில்

அதே சமயம் யாழ்-மாவட்டத்தில் உள்ள அரச ஊழியர்களுக்கான சம்பளங்களை காசாகப் பெற்றுக் கொள்ளும் முயற்சியிலும் தடங்கல் ஏற்பட்டிருக்கிறது.

பலதிணைக்களங்களுக்கு பல மாதங்களாகச்சம்பளம் கிடைக்காததாலும் சம்பளத்தை காசாகப் பெற முடியாததாலும் - இதுபற்றிப் பேச சில திணைக்களத்தலைவர்கள் கொழும்பு சென்றிருந்தனர்.

ஊழியருக்கு உரிய சம்பளத்தை காசாகப் பெற வேண்டுமானால் கூட்டுப் படைத் தலைமையகத்தின் அனுமதி பெறவேண்டும் எனச் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம். (இ-3)

### ஸ்ரான்லி வீதியில்

இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறைக்கிளை, புதன் கிழமை முதல் யாழ். நகர ஸ்ரான்லி வீதிக் கிளையில் இயங்கத்தொடங்கியுள்ளது.

இதேவேளை இலங்கை வங்கியின் காங்கேசன்துறைக் கிளை மானிப்பாயில் மட்டுப்படுத்தப்பட்ட சேவையுடன் இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-6)

# நல்லெண்ணெய்யுடன் தேங்காய்எண்ணெய் கலப்படம்

## சாவகச்சேரியில் திடீர் சோதனை

தென்மராட்சி, நவ. 11

கலப்படம் செய்யப்பட்ட நல்லெண்ணெய்ப் போத்தல்கள் சுகாதாரப் பிரிவினால் கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டன.

சாவகச்சேரிச் சந்தையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

யாழ் பிராந்திய உணவு, மருந்துவகைகள் பரிசோதகர் த. மகாதேவன் சாவகச்சேரி பொது சுகாதாரப் பரிசோதகர் க. தங்கராசா விடுதலைப் புலிகளின் தென்மராட்சி சுகாதாரப்பிரிவு பொறுப்பாளர் சேகர் ஆகியோர் இத்திடீர் சோதனையை மேற்கொண்டனர்.

இந்த திடீர் சோதனையின் போது பதினொரு வியாபாரிகளிடமிருந்த நூற்றுக்கும் அதிகமான நல்லெண்ணெய் போத்தல்கள் கைப்பற்றப்பட்டு பரிசோதிக்கப்பட்ட போது தொண்ணூறு சதவீதம் தேங்காய் எண்ணெய் சேர்க்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

ஸ்பெஷல் என்ற பெயர் பொறிக்கப்பட்ட பல தொழிற்சாலைகளின் நல்லெண்ணெய் போத்தல்களும் பிடிக்கப்பட்டன.

பொதுமக்களை விழிப்புடன் செயற்படுமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். [இ-117]

# சுன்னாகத்தில் தருமப் பணம்

சுன்னாகம் தபாலகப் பிரிவில் ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களுக்கான தருமப் பணம் (மாதாந்த உதவிப் பணம்) வழங்கப்பட்டு வருகிறது.

சுன்னாகம் தபால் நிலைய அதிபர் திரு இ. திருநாவுக்கரசு இதனைத் தெரிவித்தார்.

சுன்னாகம் தபாலகப் பிரிவில் உள்ள ஒன்பது உபதபால் நிலையங்களில் மல்லாகம், சுந்தரோடை உபதபால் நிலையங்களிலே ஏற்கனவே இந்தப் பணம் வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய பிரிவுகளுக்கும் இதனை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. [இ-3)

# மன்னார் பகுதியில் கைதான 10 பேரின் கதி தெரியவில்லை

யாழ்ப்பாணம், நவ 11

மன்னார் தீவகத்தில் ஸ்ரீலங்கா படையால் கைது செய்யப்பட்ட 10 பேர் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கட்டுக்கரையில் நடந்த சம்பவத்தில் ... தேடுதல்களின் போது இளவயதினரான இவர்கள் கைது செய்யப்பட்டு படையினரால் கூட்டிச் செல்லப்பட்டனர். (இ-3)

### மின்சாரம்

யாழ் போதனா வைத்திய சாலைக்குவியாழன் முதல் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஜெனரேட்டர் மூலம் மின்சார சபை ஊழியர்கள் மின் விநியோகத்தை வழங்கினர். இதற்குத்தேவையான டீசலை செஞ்சிலுவைச்சங்கம் வழங்கி உள்ளது. [உ-3]

# மாவீரர் தினத்தையொட்டி நவாலியில் சிரமதானம்

நவாலி, நவ. 11

மாவீரர் தினத்தை முன்னிட்டு நவாலியிலுள்ள சனசமூக நிலையங்கள் சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

நவாலி சிற்றூரவையினரின் தும்மானிப்பாய் பிரதேசசபை பொறுப்பாளரினதும் ... சரணையுடன் சிரமதானப் பணிகள் நடைபெறுகின்றன.

முருகானந்தா ச. ச. நிலையம், சென் பீற்றர்ஸ் ச. ச. நிலையம், நவாலி மேற்கு ச. ச. நிலையம், நவாலி வடக்கு ச. ச நிலையம், வளர்மதி ச. ச. நிலையம் முரசொலி ச. ச. நிலையம் ஆகியன ... (இ-100)

### நோயாளர் கொடுப்பனவு

யாழ்ப்பாணம் கச்சேரி அரசாங்க அதிபர் பிரிவில் நோயாளருக்குரிய உதவிப் பணம் பெறுவோருக்கான கொடுப்பனவுகள் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ் - செயலகத்தில் வைத்து வழங்கப்பட இருக்கின்றன. (இ-3)

### கண்டாவளையில் இருந்து மினிபஸ்

கண்டாவளையிலிருந்து முல்லைத்தீவு, வவுனியாவுக்கு மினிபஸ் சேவை நடைபெற்று வருகின்றது.

கொம்படிப் பாதையால் வரும் பயணிகள் நலன் கருதி இந்த பஸ்சேவை நடத்தப்படுகிறது. (இ-94)

# வடக்கு - கிழக்கு நிரந்தர இணைப்புக்கு எதிர்ப்பு

கொழும்பு நவ 11

வடக்கு - கிழக்கு நிரந்தரமாக இணைக்கப்படுவதை ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்கவில்லை.

இதனை காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு. பி. தயாரத்னா நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைபற்றிய விவாதம் ஒன்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

அப்போதே அவர் தமது கட்சியின் நிலையை விளக்கினார்.

இப்பிரச்சினையை தேசியப் பிரச்சினையாகக் கருதி அனைத்துத் தரப்பினரும் ஒன்று சேர்ந்து தீர்வு காண வேண்டும் — என்று சுதந்திரக் கட்சி எம். பி திரு. கே. பி. இரத்னாயக்கா சொன்னார். (அ எ)

### தேங்காய்த் திருடர்

சாவகச்சேரி, நவ 11

மட்டுவில் பகுதியில் தேங்காய்த் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்து வருகிறது.

திருடர்கள் இரவில் மரம் ஏறி தேங்காய் பிடுங்கிச் செல்லும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-31)

# உள்ளூராட்சி ஊழியருக்கு சம்பளம் வழங்க ரூ. 40 லட்சம்

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ். குடாநாட்டில் உள்ள மாநகரசபை, நகரசபைகள், பிரதேசசபைகள் உள்ளிட்ட உள்ளூராட்சி மன்ற ஊழியர்களுக்கு அக்டோபர் மாதச் சம்பளம் வழங்குவதற்குத் தேவையான 40 லட்சம் ரூபா பணம் வந்து சேரவிருக்கிறது.

அண்மையில் கொழும்புக்கு சென்றிருந்த யாழ் மாநகர சபை ஆணையாளர், திரு மலைவயிலுள்ள தமது தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

இந்த 40 லட்சம் ரூபா பணமும் மாநகரசபை ஆணையாளரால் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு மூலம் "விங்கோ டேடர்" என்ற கப்பலில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணம் இங்கு வந்து சேர்ந்ததும் ஊழியர்களுக்கான அக்டோபர் மாதச் சம்பள விநியோகம் உடனடியாக மேற்கொள்ளப்படும். (இ - 6)

# புங்குடுதீவில் றோலர்கள் மீது கடற்படை பீரங்கித் தாக்கு

புங்குடுதீவு கிழக்கு கரையோரப் பகுதியில் நங்கூரமிடப்பட்டிருந்த மீன்பிடி றோலர்கள்மீது கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் நடத்தினர். இதனால் றோலர்கள் தீப்பற்றி எரிந்தன.

வெள்ளிக்கிழமை இரவு இச்சம்பவம் நடந்தது.

தாக்குதல் நடைபெற்ற சமயம், கடற்படையினரால் பராவெளிச்சமும் பாய்ச்சப்பட்டது. (இ-25)

### கூட்டுறவாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ 11

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கான மாவீரர் தினம் சம்பந்தமான கலந்துரையாடல் இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு யாழ். சிறாம்பியடி லேனில் உள்ள மணியம்ஸ் கட்டடத்தில் நடைபெறும். [இ-6]

# இசை ஆசிரியர் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், நவ 11

மருதனார்மட கோட்டக் கல்விக்கு உட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் இசை ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு நாளை 21 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (இ-6)

# இப்படியும் மோசடி!

யாழ்ப்பாணம், நவ. 11

"...ண்டு மாஸ்டரில்" விறகு வருவதாகக் கூறி குடும்பப்பெண் ஒருவரிடம் 300 ரூபா பெற்றவர், அப்பணத்துடன் தலைமறைவானார்.

இந்தச் சம்பவம் சமீபத்தில் யாழ். தட்டாதெருப் பகுதியில் இடம்பெற்றது.

பிரஸ்தாப பெண்ணின் கணவர் வெளியே சென்றிருந்த சமயம் இந்த மோசடி நடைபெற்றதாம்.

பணத்தைக் கொடுத்துவிட்டு பெண் விறகுக்காக நீண்டநேரம் காத்திருந்தார். பின்பே தாம் ஏமாற்றப்பட்டது அவருக்குத் தெரிய வந்தது.

விறகுத் தட்டுப்பாட்டைப் பயன்படுத்தி வீடுகளில் உள்ள குடும்பப் பெண்களை இப்படிச் சிலர் மோசடி செய்கின்றனர் என்று கூறப்படுகிறது. (இ - 15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவைத், ஈராக்

# விண்ணப்பப் படிவம் பெற கடவுச்சீட்டு கட்டாயமல்ல

யாழ்ப்பாணம், நவ. 11

குவைத்திலிருந்தும் ஈராக்கிலிருந்தும் நாடு திரும்பியவர்கள் தாம் அங்கிருந்து வந்ததற்கான ஆதாரங்களாக எந்த ஆவணத்தையும் காட்டி விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கடவுச்சீட்டைத்தான் காட்டவேண்டும் என்ற கட்டாயமில்லை.

கடவுச்சீட்டை காட்ட முடியாததால் தமக்கு விண்ணப்பங்களை வழங்க செஞ்சிலுவைத் தொண்டர்கள் மறுத்துவிட்டதாக உதயனுக்குக் கிடைத்த முறைப்பாடுகள் குறித்துக் கேட்டபோது யாழ். செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் ஆ. தெய்வேந்திரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது ஒரு மனிதாபிமான நடவடிக்கை. எனவே இதில் கட்டாயமாக இன்னதைத் தான் காட்ட வேண்டும் என்பதில்லை. சம்பந்தப்பட்டவர்கள் தாம் குவைத்திலிருந்ததை அத்தாட்சிப்படுத்தும் எந்த ஆவணத்தையும் காட்டி விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். [அ-5]

## கண்டனம்

யாழ் ஆஸ்பத்திரி பாதுகாப்புப் பகுதியில் குண்டு வீசிய ஸ்ரீலங்கா அரசின் செயல் அரசியல் அநாகரிகமானதும் மனித நேயத்திற்கு முரணானதும் ஆகும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் கண்டனம் தெரிவித்துள்ளது. [அ]


BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

கலை, வர்த்தகம்
A/L 90, 91, 92
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
ஆரம்பம்: 11 - 11 - 1990
ஞாயிறு 8. 00 A. M.
வழமையான ஆசிரியர் குழுவினால்
வகுப்புக்கள் நடாத்தப்படும்
[14715]


# இன்று முதல் தர்மப் பணம்

சுன்னாகம், நவ. 11

சுன்னாகம் பகுதி மக்களுக்கான தர்மப்பணம் இன்று ஞாயிறு முதல் வழங்கப்பட இருக்கிறது.

தபால் திணைக்களம் வழங்கிய காசோலையை தனியார் நிறுவனம் ஒன்று தமக்கு பணமாக்கித் தந்துதவியதைத் தொடர்ந்தே தர்மப்பணத்தை வழங்க இயலுகிறது என்று சுன்னாகம் தபாலதிபர் தெரிவித்தார்.

## பல்கலைக்கழக கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ். பல்கலைக்கழகமாணவர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்களுக்கான கூட்டம் ஒன்றை பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

நாளை திங்கட்கிழமை கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பல முக்கிய பிரமுகர்கள் உரையாற்றுவர் என்று தெரிவிக்கப்பட்டது. [உ]

### வீடு நிலங்களை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

உரவகைகள் ஆகியவற்றுக்கு ஸ்ரீலங்கா அரசு விதித்துள்ள தடைகளிலிருந்து விடுபட உள்ளூர் உணவு உற்பத்தியை ஊக்குவிக்கவேண்டியது குறித்தும் விரிவாக விளக்கப்பட்டிருந்தது.

நாட்டைவிட்டு வெளியேறுவோரின் வீடுகளைப் பொறுப்பேற்று வீடுகள், சொத்துக்களை இழந்து தவிப்பவர்களை அவற்றில் குடியேற்றவும்—

பயிர் செய்யப்படாமலிருக்கும் நிலங்களை அவர்களுக்கு வழங்கி பயிர் செய்கையில் அவர்களை ஈடுபடுத்தவும் திட்டமிடப்பட்டிருப்பது குறித்து அறிக்கையில் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

[மேற்படி அறிக்கையின் முழு விவரம் பின்னர் உதயனில் வெளிவரும்] [உ]

### படகு மீது...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

படகில் புங்குடுதீவைச் சேர்ந்த சுப்பிரமணியம் தியாகராஜா [வயது 46] என்பவரின் சடலம் துப்பாக்கிக் காயங்களுடன் கிடக்கக் காணப்பட்டது. உயிரிழந்த தியாகராஜா நான்கு பிள்ளைகளின் தந்தை ஆவார். [உ]

### பொறியலாளர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி

மோட்டார் வாகன கம்பனி ஒன்றுக்குச் சென்று வாகனம் ஒன்றை வாங்க பணம் செலுத்தினார்.

பணத்தைச் செலுத்திவிட்டு வெளியே வந்தவரை இரகசிய பொலீஸார் கைது செய்தனர்.

அக்டோபர் மாதம் 22 ஆம் திகதி கைதானவர் கோட்டை நான்காம் மாடியில் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

15 நாட்களின் பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை அவர் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சரவணபவான் இறப்பதற்கு முன்னர் தான் தற்கொலை செய்ததாக குறிப்பு ஒன்றை எழுதி வைத்திருந்தார் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

கொழும்பு நீதிவான் மகேஷ் குணதிலகா, அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் [illegible] விழுந்து கிடந்ததாகச் சொல்லப்படும் இடத்தைச் சென்று பார்வையிட்டனர் [ஒ-எ]

# ஆசிரியர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ் மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்குரிய கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக் கல்வி, சமயம் உட்பட 9 பாடங்களுக்கான குறுகியகால பாடத்திட்ட கருத்தரங்குகள் சேவைக்கால ஆலோசகர்களால் நடத்தப்படுகின்றன.

கருத்தரங்குகள் 12, 13, 14 ஆம் திகதிகளில்நடைபெறும்.

12 ஆம் திகதி கருத்தரங்கு நடைபெறும் பாடங்கள், பாடசாலைகள் பற்றிய விவரங்கள் வருமாறு:-

**கணிதம்**

இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் இந்து, நீர்வேலி அத்தியார் இந்து, புத்தூர் சோமாஸ்கந்தா, பண்டத்தரிப்பு இந்துமகளிர், சுழிபுரம் விக்டோரியா, அளவெட்டி அருணோதயா, ஸ்கந்தவரோதயா, நெல்லியடி ம. ம. வி., டரு. மெதடிஸ்த மகளிர் கல்லூரி யாழ். இந்து மகளிர், சாவகச்சேரி இந்து வேலணை துரைச்சாமி ம. ம. வி.

**விஞ்ஞானம்**

இராமநாதன் கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்து, பண்டத்தரிப்பு இந்து மகளிர், சுழிபுரம் விக்டோரியா, நெல்லியடி ம ம. வி, யாழ் இந்து மகளிர், சாவகச்சேரி இந்து மகளிர், வேலணை துரைச்சாமி ம. ம. வி.

**சமூகக்கல்வி**

இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் இந்து, அத்தியார் இந்து, புத்தூர் சோமஸ்கந்தா, யாழ் கொன்வென்ட். வேலணை துரைச்சாமி ம.ம. வி, புங்குடுதீவு ம.வி, வேலாயுதம் ம.வி, உசன் ம.வி. பண்டத்தரிப்பு மகளிர். சாவகச்சேரி இந்து, சுழிபுரம் விக்டோரியா.

**தமிழ்**

இராமநாதன் கல்லூரி. மானிப்பாய் இந்து, நீர்வேலி அத்தியார் இந்து, புத்தூர் சோமஸ்கந்தா, கொன்வென்ட் ம. வி. வேலணை துரைச்சாமி ம வி.

(13 ஆம் திகதி கருத்தரங்கு நடைபெறும் பாடசாலைகளின் விவரம் நாளை தொடரும்) [உ-6]

## ஓராண்டு நினைவஞ்சலி

பொன்னையா வள்ளிப்பிள்ளை



அன்னை மடியில் :
28 - 02 - 1923

ஆண்டவன் அடியில் :
23 - 10 - 1989

திதி :
11 - 11 - 1990

எங்களை நல்வழி காட்டி வாழ வைத்த அம்மா! உங்களை இன்று நன்றியுடன் நினைவு கூர்ந்து உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆறாத்துயரில் ஆழ்ந்து நிற்கும் :
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

கன்பொல்லை,
நெல்லியடி, கரவெட்டி.

(14739)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



தமிழ் தாய் மகிழ்ந்திட :
04 - 09 - 1974

★

தமிழ் தாயகம் மலர்ந்திட :
28 - 09 - 1990

★ வீரவேங்கை ரமேஸ் ★

(செல்வன் இரத்தினம் சத்தியராஜ்)

அன்பு மகனே ! ஆருயிர் தம்பியே
வீர வேங்கை சத்தியா
உன்னை எப்படியடா நாம் மறப்போம்?
இந்த இளம் வயதினிலே
பாயும் புலியாய் நீ திகழ்ந்திட்டாயடா - ரமேஸ்
மண்கும்பானில் புறப்பட்ட
சிங்கள சிப்பாய்களை
நேரடி மோதலில் திணறவைத்தாயடா - ரமேஸ்
அக்கணமே உன் வீரநெஞ்சில்
சரமாரியாக குண்டு மழைகள் பொழிந்தன
அக்கணமே ஈழமண்ணில் நித்திரையடைந்தாயடா
மீண்டும் தமிழீழத்தில் நீ அனலாய் எழுவாய்
இதுவே உறுதி!!

அன்பு
தாய், தந்தை,
சகோதரர்கள், உறவினர்.

ஊரி கொட்டைப்புரம்.
களபூமி. காரைநகர் கிழக்கு

[14724]

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் தியாகராசா

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 1 ஆம் குறுக்குத்தெருவை வசிப்பிடமாகக் கொண்டவரும், கொழும்பு உமாரேடிங் சென்றர் பங்காளியுமாகிய சுப்பிரமணியம் தியாகராசா அவர்கள் அகால மரணமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற முன்னாள் பிரபல வர்த்தகர் சுப்பிரமணியம்,மாணிக்கம் தம்பதியரின் அன்புமகனும், சந்தையா தம்பதியரின் அன்பு மருமகனும், இராசேஸ்வரியின் அன்புக்கணவரும், சுகந்தினி, சுதர்சன், சுகாசுனி, சுதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருநாவுக்கரசு, கருணை கடாட்சம், கருணாகரன்,புவனேஸ்வரி, கோபாலபிள்ளை, ராஜேஸ்வரி, லீலாவதி,வில்வரெத்தினம் ஆகியோரின் சகோதரரும், மாசிலாமணி, செண்பகவல்லி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று [11 - 11- 90] ஞாயிற்றுக்கிழமை மாலை 4. 00 மணிக்கு அன்னாரின சகோதரர் திருநாவுக்கரசு அவர்களின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பெருங்காடு முனைப்புலம்மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

தகவல்!
அ கோபாலப்பிள்ளை.

(14288)

## கந்தையா குமாரசாமி

[முன்னாள் ஸ்ரீ கருணாநிதி பிரின்டர்ஸ் உரிமையாளர்]

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா குமாரசாமி 10 - 11 - 90 அதிகாலை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் 11 - 11 - 90 ஞாயிற்றிக்கிழமை காலை 9 மணிக்கு ஐயனார் கோவிலடி நாவற்குழியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக நாவற்குழி பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்

தகவல்:
எஸ். தில்லைநாதன்.
(இளைப்பாறிய ஆசிரியர்)

ஐயனார் கோவிலடி,
நாவற்குழி.

[14286]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 11 - 11 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org